# பெருநகர
# சென்னை மாநகராட்சி

## ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்

EDP CELL * CORPORATION OF CHENNAI *
22 MAY 2017

ஆண்டு சந்தா ரூ. 2,000/-

மலர் : 23 இதழ் : 1159 நாள் : 18 – 05 – 2017

## 1. திட்டத்துறை (இ.டி.பி செல்)

**இ.டி.பி.எண்./சி2/303/2017**

## e- ஒப்பந்தப்புள்ளிகள்

கீழ்கண்ட பணிகளுக்கு இரண்டு உறை முறையில் மேற்பார்வை பொறியாளர், திட்டத்துறை அவர்களால் கோரப்படுகிறது.

| வ. எண் | கோப்பு எண் பணியின் பெயர் | பணியின் மதிப்பு (ரூ இலட்சத்தில்) | முன் வைப்புத் தொகை (ரூ) | ஒப்பந்ததாரர் பதிவு நிலை | ஒப்பம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| 1. | **இ.டி.பி.எண்./சி2/303/2017** ஒப்பந்த அடிப்படையில் 1913 அழைப்பு மையத்திற்கு 18 நபர்கள் 24X7 மணி நேரத்திற்கு ரிப்பன் மாளிகையில் ஒரு வருட காலத்திற்கு (365 நாட்கள்) பணி செய்வது மற்றும் தரம் சரிபார்க்கும் பணிக்கு நியமித்தல் | 41.73 | 41,730/- | ஒப்பப்படிவத்தில் உள்ள படி | 02.06.2017 மாலை 3.00 மணி |

1. ஒப்பப்படிவங்கள் இணையதளம் http://tntenders.gov.in –ல் **02.06.2017 அன்று மாலை 3.00 மணி வரை** இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யலாம். ஒப்பந்ததாரர் Digital Signature Certificate பெற்றிருக்க வேண்டும். மேலும், ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் தான் சமர்ப்பிக்க வேண்டும்.

2. ஒப்பந்ததாரர் **02.06.2017 அன்று மாலை 3.00 மணிக்கு** முன்னதாக இணையதளம் மூலம் சமர்ப்பிக்க வேண்டும். இணையதளம் மூலம் பெறப்படும் ஒப்பங்கள் **02.06.2017 அன்று மாலை 3.30 மணிக்கு** ரிப்பன் மாளிகை திட்டத்துறை அலுவலகத்தில் ஒப்பந்ததாரர் முன்னிலையில் இணையதளம் மூலம் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் விடுமுறையாக இருப்பின்அடுத்த வேலை நாட்களில் அதே நேரத்தில் திறக்கப்படும்.

3. ஒப்பந்ததாரர் முன்வைப்புத் தொகையினை தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் இருந்து வரைவு காசோலை பெற்று 02.06.2017 அன்று மாலை 3 மணிக்குள் இந்த அலுவலகத்தில் மட்டும் சமர்ப்பிக்க வேண்டும். முன்வைப்புத் தொகைக்கான காசோலை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் பெயரில் எடுக்கப்பட வேண்டும்,

4. ஒப்பந்தபடிவங்கள் சமர்ப்பிக்கும் பொழுது முன்வைப்புத் தொகை காசோலையின் நகலினை (EMD Copy) இணைத்து அனுப்ப வேண்டும். கொடுக்கப்படும் காசோலையின் காலம் 90 நாட்களுக்கு மிகையாமல் இருக்க வேண்டும். காசோலையை தனியாக உரையில் சமர்ப்பிக்க வேண்டும்.

5. முன்வைப்புத் தொகைக்கான அசல் வரைவு காசோலை அல்லது அசல் வங்கி உத்திரவாதத்தினை ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலரிடம் **02.06.2017 அன்று பிற்பகல் 3 மணிக்குள்** சமர்ப்பிக்க வேண்டும்.

6. ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமான திருத்தங்கள் ஏதேனும் இருப்பின் இணையதளம் மூலம் தெரிவிக்கப்படும். நிர்வாக காரணங்கள் ஏதேனும் இருப்பின் ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்யும் உரிமை அலுவலருக்கு உள்ளது.

**மேற்பார்வை பொறியாளர் (திட்டம்)**

## 2. பாலங்கள் துறை

**பா.து.ந.க.எண்.பி3/0335/2017**

### ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கீழ்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி இ–டெண்டர் மூலமாக கோரப்படுகிறது

| வ. எண் | கோப்பு எண் பணியின் விவரம் | பணியின் மதிப்பு (ரூ. இலட்சத்தில்) | முன்வைப்புத் தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பதிவு நிலை | ஒப்பப் படிவம் சமர்பிக்க கடைசி நாள் |
|---|---|---|---|---|---|
| 1. | **பா.து.ந.க.எண்.பி3/0105/2017** மறு ஒப்பம் மண்டலம்–6, வார்டு–71, 73 மற்றும் 75ல் உள்ள ஒட்டேரி நல்லா கால்வாய் குறுக்கே ஸ்ட்ராஹன்ஸ் சாலை, பிரிக்லின் சாலை, கொன்னூர் நெடுஞ்சாலை மற்றும் குக்ஸ் ' சாலையை இணைக்கும் தற்போதுள்ள பாலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள பராமரிப்பு பணி, (2வது அழைப்பு) | 27,30,191/- | 27,400/- | வகுப்பு 3 மற்றும் அதற்கு மேலும் | 02.06.2017 பிற்பகல் 3.00 மணி வரை |
| 2. | **பா.து.ந.க.எண்.பி3/0113/2015** மறு ஒப்பம் மண்டலம்–8, வார்டு–106ல் இரயில்வே காலனி மூன்றாவது தெருவில் உள்ள பழைய நடைபாலத்திற்கு பதிலாக புதிய பெட்டக வடிவ பாலம் அமைக்கும் பணி. (3வது அழைப்பு) | 51,27,575/- | 51,280/- | வகுப்பு 2 மற்றும் அதற்கு மேலும் | 02.06.2017 பிற்பகல் 3.00 மணி வரை |
| 3. | **பா.து.ந.க.எண்.பி3/0335/2017** வடக்கு மண்டலங்களிலுள்ள (1 முதல் 5) பாலங்கள், சுரங்கப்பாதைகள் / சிறுபாலங்கள் / நடைமேம்பாலங்களின் சிவில் மேம்பாடுகள் மற்றும் பராமரிக்கும் பணி. | 30,00,000/- | 30,000/- | வகுப்பு 3 மற்றும் அதற்கு மேலும் | 02.06.2017 பிற்பகல் 3.00 மணி வரை |



குப்பையை மக்கும் குப்பை, மக்காத குப்பை என்று தரம் பிரித்து
வீடு தேடி வரும் துப்புரவுப் பணியாளர்களிடம் வழங்குங்கள்

4. **பா.து.ந.க.எண்.பி3/0336/2017**

| | | | | |
|---|---|---|---|---|
| மத்திய மண்டலங்களிலுள்ள (6 முதல் 10) பாலங்கள், சுரங்கப்பாதைகள் / சிறுபாலங்கள் / நடைமேம்பாலங்களின் சிவில் மேம்பாடுகள் மற்றும் பராமரிக்கும் பணி. | 30,00,000/- | 30,000/- | வகுப்பு 3 மற்றும் அதற்கு மேலும் | 02.06.2017 பிற்பகல் 3.00 மணி வரை |

5. **பா.து.ந.க.எண்.பி3/0337/2017**

| | | | | |
|---|---|---|---|---|
| தெற்கு மண்டலங்களிலுள்ள (11 முதல் 15) பாலங்கள், சுரங்கப்பாதைகள் / சிறுபாலங்கள் / நடைமேம்பாலங்களின் சிவில் மேம்பாடுகள் மற்றும் பராமரிக்கும் பணி. | 30,00,000/- | 30,000/- | வகுப்பு 3 மற்றும் அதற்கு மேலும் | 02.06.2017 பிற்பகல் 3.00 மணி வரை |

---

1. ஒப்பபடிவங்கள் http://tntenders.gov.in/nicgep/app என்ற இணையதளம் மூலம் **02.06.2017 அன்று மாலை 3.00 மணி வரை** பார்க்கவும் பதிவிறக்கமும் செய்து கொள்ளலாம். இணையதளம் மூலம் ஒப்பங்களை சமர்ப்பிக்கும் ஒப்பந்ததாரர் வகுப்பு 2 மற்றும் 3–ல் இதற்கான Digital Signature Certificate ஐ ஒப்பந்ததாரர் பெற்றிருக்க வேண்டும்.

2. ஒப்பந்ததாரர் மத்திய / மாநில அரசு / அரசு சார்ந்த நிறுவனங்களில் ஒரு பாலப் பணி, கட்டிடப் பணி, மழைநீர் வடிகால் பணி / பெட்டக வடிவ பாலமாவது வகுப்பு – 2 (ரூ.35 லட்சத்திற்கு மேல் 75 லட்சம் வரை) வகுப்பு–3 (ரூ.15 லட்சத்திற்கு மேல் 30 லட்சம் வரை) களில் பணி முடிக்கப்பட்டோ பணி மேற்கொள்ளப்பட்டு கொண்டிருக்க வேண்டும்.

3. தகுந்த அலுவலரிடம் பெற்ற, முடிக்கப்பட்ட பணிகளின் அனுபவ சான்றிதழ் பராமரிப்பு பணி மேற்கொள்ள தகுதியாக ஏற்றுக்கொள்ளப்படும். நடைபெற்றுக்கொண்டிருக்கும் பணிகளுக்கு விவரங்கள் அடங்கிய சான்றிதழ் பணியின் மதிப்புடன் சமர்ப்பிக்க வேண்டும். பணி ஆணை மற்றும் இரசீது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4. ஒப்பம் கோரப்படும்போது சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்களில் ஒளி நகல்களை சரிபார்க்க, அசல் சான்றிதழ் கோரும்போது ஒப்பந்ததாரர் சமர்ப்பிக்க வேண்டும். அசல் சான்றிதழின் உண்மைத் தன்மையில் தவறு இருப்பது பின்னர் தெரியவரின் சென்னை மாநகராட்சியால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

5. மேலும், ஒப்பந்ததாரர் Digital Signature செய்த பிறகு மேற்கூறப்பட்ட இணையதளம் மூலம் மின்னணு வடிவத்தில் சமர்ப்பிக்க வேண்டும் இதற்கான Digital Signature Certificate இல்லாத ஒப்பந்ததாரரின் ஒப்பங்கள் ஏற்கப்படமாட்டாது.

6. ஒப்பந்ததாரர் **02.06.2017 அன்று மாலை 3.00 மணிக்கு** முன்னதாக இணையதளம் மூலம் ஒப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும். இணையதளம் மூலம் பெறப்படும் தொழில் நுட்ப ஒப்பங்கள் **02.06.2017 அன்று மாலை 3.30 மணிக்கு** பாலங்கள் துறை அலுவலகத்தில் ஒப்பத்தில் பங்கு பெற்ற ஒப்பந்ததாரர் முன்னிலையில் இணையதளம் மூலம் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் விடுமுறையாக இருப்பின் அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் திறக்கப்படும்.